# அன்பான உபசரிப்புக்கு பெயர் பெற்றது

# சரவணபவன்



முகப்பு தோற்றம்

**தில்லை கார்த்திக்**

கோலாலம்பூர், அக். 4-

தலைநகரில் பங்சார் மற்றும் மஸ்ஜித் இந்தியா ஆகிய இடங்களில் இயங்கி வரும் தமிழகத்தில் பிரசித்திப் பெற்ற ஹோட்டல் சரவணபவனின் கிளைகளில் தீபாவளி இனிப்பு வகைகள் பலவித சுவைகளுடன் உள்ளதால் தீபாவளி ஆர்டர்கள் குவியத் தொடங்கியுள்ளன என்று மேலாளர் பாண்டியன் தெரிவித்தார்.

சென்னை, காஞ்சிபுரம், வேலூர், டில்லி மற்றும் இந்தியாவில் 25 கிளைகளையும் அமெரிக்கா, கனடா, சிங்கப்பூர், லண்டன், நியூயார்க், மஸ்கட் போன்ற இடங்களிலும் தங்களுக்கென தனிச்சுவையையும் வாடிக்கையாளர்களையும் கொண்டுள்ள ஹோட்டல் சரவணபவன், தலைநகரில் இரு இடங்களில் தங்களது கிளைகளை திறந்து தனி இடத்தைப் பிடித்துள்ளது. அடுத்து பெட்டாலிங் ஜெயாவில் ஒரு கிளை விரைவில் திறக்கப்படவுள்ளது.

திருமுருக கிருபானந்த வாரியாரின் சீடரான அண்ணாச்சி ராஜகோபால் இளவயதில் ஹோட்டலில் கஷ்டப்பட்டு வேலை செய்து, பிறகு சிறிய முதலீட்டில் மளிகைக் கடை வைத்து, தனது உழைப்பால் முன்னேறி இன்று பல நிறுவனங்களுக்கு உரிமையாளராக உள்ளார்.

சென்னை கே.கே. நகரில் 1982இல் வாரியாரால் திறக்கப்பட்டதுதான் இந்த உணவகம். சுமார் 25 வருடங்களாக தமிழர்களின் நெஞ்சங்களில் ஒரு நிலையான இடத்தைப் பிடித்துள்ளது.

அண்ணாச்சியிடம் வேலை பார்க்கும் சுமார் 5000 தொழிலாளர்களும் தனது கஷ்டத்தை இவர்கள் படக்கூடாது என்ற காரணத்திற்காக அரசு உதவி களைவிட தனது தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு, குழந்தைகளுக்குப் படிப்பு உதவி, வாகன வசதி, தொழிலாளர் நல நிதி என


பாண்டியன் (மேலாளர்)

பல வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கிறார். இதைவிட எங்கள் பெற்றோர்களுக்கு மாதம் ரூ.200 அனுப்பி வைத்து எங்கள் குடும்பங்களில் பாலை வார்க்கிறார் என்று சரவணபவன் ஊழியர் ஒருவர் தெரிவித் தார்.

வெளிநாடுகளிலும் தங்கள் சேவையைத் தொடர எண்ணிய அண்ணாச்சி, 2000இல் துபாயில் தொடங்கினார். அங்கு கூட புதியவர் களை நியமிக்காமல், தன்னிடம் 10 வருடமாக வேலை பார்த்தவர்களை அனுப்பி வைத்தார். அவர்களுக்கு விசா செலவு, பயணச்செலவு, 2 வருடங் களுக்கு ஒருமுறை விடுமுறை என அனைத்து சலுகைகளையும் அளித்துள்ளார். அதனால் நாங்கள் எங்கள் சொந்த ஹோட்டல் போல் நேரம், காலம் பார்க்காமல், வாடிக்கையாளர்களின் மனம் கோணாமல் உபசரிக்கிறோம் என்றனர் உணவகத் தொழிலாளர்கள்.

தலைநகரில் உள்ள உணவகங்களில் சுமார் 45 பேர் வேலை செய்கிறார்கள். உயர்தர, நடுத்தர மக்கள் இந்திய சுவையுடன் உணவருந்த அவர்கள் மனதில் தோன்றக்கூடிய உணவகமாக சரவணபவன் உள்ளது. இதை விட அசைவப் பிரியர்களுக்கு சில்லி சிக்கன், மட்டன் போன்ற 50 வகை அசைவ உணவுகள் தயாரிக்கப்படுகின்றன.

## தீபாவளி இனிப்புகளும் தனிச்சுவைதான்


இனிப்பு வகைகள்

தமிழ்நாடு, திருநெல்வேலியிலிருந்து இங்கு வந்து பணிபுரியும் தொழிலாளர் சண்முகசுந்தரம் மற்றும் நண்பர்கள் கூறும்போது, இந்த நாட்டிற்கு வந்து ஊர் சாப்பாடு சாப்பிடணும் என்ற நினைப்பு வந்த உடனேயே சரவணபவனுக்கு வந்து விடுவோம் என்றனர்.


அண்ணாச்சி ராஜகோபால்

சென்னையிலிருந்து சுற்றுலாப் பயணியாக வந்துள்ள ரவிகுமார், அவரது மனைவி பிரியா ஆகியோர் கூறும்போது, இங்கு வந்து 4 நாட்களாக ஊர் சாப்பாட்டுக்காக ஏங்கி நின்றோம். சரவணபவன் இருப்பதைக் கேள்விப்பட்டு மூன்று நாட்களாக எங்கள் ஊர் சுவையுடன் சாப்பிடும் மகிழ்ச்சியோடு உள்ளோம் என்றனர்.

தமிழகத்தைச் சேர்ந்த பொறியியலாளரான பாலா விஸ்வநாதன், இங்கு பெட்ரோனாஸ் நிறுவனத்திற்கு வந்துள்ளார். அவர் கூறும் போது, தரமான உணவு, நல்ல உபசரிப்பு இதற்குப் பெயர் பெற்றது சரவணபவன் மனம் கோணாமல் கேட்பதை உடனடியாக கொடுக்கும் பணியாளர்கள். அதோடு இதன் சுவையே தனி ரகம் என்றார்.


பாலவிஸ்வநாதன்

கிளைகளின் மேலாளர் பாண்டியன் கூறும்போது, எங்கள் சேவையைப் பார்த்து இங்குள்ள சீன, மலாய் சமூகத்தினர்கூட வாடிக்கையாளர்களாகி விட்டார்கள். சரவணபவன் என்றாலே தனிச்சுவையோடு நல்ல உபசரிப்போடு கவனிப்பார்கள் என்ற பெயர் உள்ளது. அதோடு ஒரு தனி மதிப்பும் உண்டு என்றார்.

தற்போது தீபாவளி வருவதால் நல்ல சுவையோடு, இதற்காக பிரத்தியேக மாக பலகாரம் போடும் பணியாளரை அமர்த்தி அனைத்து இனிப்பு வகைகள், முறுக்கு, சீடை போன்று பலவகை பலகாரங்களைத் தயாரித்து வருகிறோம்.

தீபாவளி பலகாரங்கள் ஆர்டர் கொடுப்பவர்கள் தினந்தோறும் வந்து செல்கிறார்கள். இதுவரை ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களிடம் ஆர்டர் வாங்கி அவர்களின் சுவைக்கு ஏற்ப தயார் செய்து வருகிறோம் என்றார் அவர்.

நாங்கள் சென்ற நேரத்திலும் வாடிக்கையாளர்களின் கூட்டம் இவர் கூறுவது உண்மை என்பதை நிரூபித்தது.